தேசிய அறிவியல் மனப்பான்மை முனைப்பு நாள் : **2021**

கோவிட் பெருந்தொற்றை எதிர்த்துப்போராட வேண்டுமெனில் நமக்குத் தேவை அறிவியல் மனப்பான்மை முனைப்பு.

சோதிடவியல் கற்பிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை எதிர்த்து நில்லுங்கள் !

நடப்புக்கல்வி ஆண்டிலிருந்து, சோதிடம்- முதுகலைப்பட்டப்படிப்பு-( எம்.ஏ.- ஜ்யோதிஷ் )என்ற பாடப்பிரிவைக் கற்பிக்கப்போவதாக இந்திராகாந்தி தேசிய திறந்தனிலைப் பல்கலைக்கழகம் சமீபத்தில் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு ( ஏ ஐ பி எஸ் என் ) மற்றும் அதனுடன் இணைந்துள்ள எல்லா அறிவியல் இயக்க அமைப்புகளும் மிகுந்த கவலையுடன் நோக்குகின்றன. இதே மாதிரியான படிப்புகள் அரசு நிதி நல்கைகள் மூலம் இயங்கிவரும் மேலும் சில பல்கலைக் கழகங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன என்பதையும் நாங்கள் கவனத்திற்கொண்டிருக்கிறோம். கல்விக்கலைத்திட்டத்தின் எல்லா நிலைகளிலும் ‘இந்திய அறிவுசார் முறைகள்’ அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற தேசிய கல்விக்கொள்கை 2020-இன் பரிந்துரையை மேற்கண்ட படிப்புகள் நிறைவேற்றுகின்றன என்பதாக இப்பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் உரிமை கோருகின்றனர்.இவ்வாறு உரிமை கோருவதன் மூலம், இத்தகைய படிப்புகளை அறிமுகம் செய்வதை அவர்கள் நியாயப்படுத்துகின்றனர்.

தத்துவம், உலோகவியல், கணிதம், வானியல் உள்ளிட்ட பல்வேறு களங் களில் அறிவுச்செல்வ உருவாக்கத்தில் இந்தியா மிகச்செழுமையான மரபைக் கொண்டிருக்கிறது. வெவேறு காலகட்டங்களில், வெவ்வேறுபட்ட வழிகளில் கடந்த காலத்தின் மாபெரும் பண்பாடுகள் நவீன அறிவியல் மரத்திற்கு நீர்வார்த்து, பாதுகாத்து வளர்த்து வந்துள்ளன. இந்தக்கூட்டு அறிவுச் செல்வத் திற்கு இந்தியா வழங்கியுள்ள பங்களிப்புகளில் சில, மறுக்க முடியாத அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. அறிவியலின் எந்த ஒரு முழுமைத் துவக்கற்றலிலும் இவை ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருபவை.

எனினும், நம்முடைய தொன்மையான புனைகதைகளின் அடிப்படையில் பண்டைய இந்தியாவில் அறிவியல்ரீதியான, தொழில்னுட்ப இயல்கண்டு பிடிப்புகளைப் பற்றிய தவறான,மிகையான உரிமைகோரல்கள், இந்திய அறிவியலின் உண்மையான வரலாற்றுக்கு இழிவான பெயரைத்தேடித் தருவதாகவே அமைகின்றன. அதேபோல, சோதிடவியல் போன்று, முற்றிலும் போலி அறிவியல் களங்களுக்கு அங்கீகரிப்பையும், நம்பகத்தன்மைக்கான சான்றிதழையும் வழங்குவதன் விளைவுகள் மோசமாகவே இருக்கும். எடுத்துக்காட்டுக்காக, தொன்மையான காலத்தில் இந்தியர்கள் வானில் பறப்பதற்கான தொழில்னுட்ப அறிவு பெற்றிருந்தனர் என்று உரிமை கோருவது. எளிதில் தவறு என்று நிரூபணம் செய்யப்படக்கூடிய மேற்கண்ட செய்திகளை நம்முடைய மாணவர்கள் கற்கும் ஒவ்வொரு நிமிடமும், இந்திய அறிவியலின் உண்மையான வரலாற்றைக்கற்பதற்கு அர்ப்பணிக்கப்பட வேண்டிய நிமிடமாகும். இதில் மாபெரும் முரண்னகை என்னவெனில், ஒட்டுமொத்தச் சூழலில், சோதிட சாஸ்திரக்கல்வியில், வருங்காலப்பலன் களைக்கூறும் ராசிபலன் பகுதியே இந்திய உருவாக்கம் அல்ல என்பதுதான் ! ஜாதகத்தை அடிப்படையாகக் கொண்ட ராசிபலன் அடையாளம் மூலம் எதிர்கால நிகழ்வுகள்,பலன்களைக் கணித்து முன்னுணர்ந்து சொல்லுவதாக உரிமை

கோரும் இந்த நடைமுறை கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இந்தியாவில் பின்பற்றப்பட்டு வருகிறது.அதற்கு முன்பு இங்கு இம்மாதிரிப் பழக்கமே கிடையாது என்பதற்கான போதிய ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இது கிடையாது. அந்தக்காலகட்டத்தின்போது தான் மேற்கண்ட சால்டீன், கிரேக்கச் சிந்தனைகள் இந்தியக்கடற்கரைகளை வந்தடைந்துள்ளன.

சோதிடவியல் முன்கணிப்புகள் அனைத்தும், எந்த ஒரு கறாரான புள்ளி விவரங்களின் அடிப்படையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டாலும் தோல்வியையயே சந்தித்து வந்துள்ளன. மனித உடலின்மீது, எந்தவோர் அர்த்தமுள்ள,ஆக்கரீதியான தாக்கத்தையும் கோள்கள் ஏற்படுத்துகின்றன என்பதற்கு அறிவியல்ரீதியான எந்த ஓர் அடிப்படையுமே கிடையாது. கடைசியாக, மனிதர்களின் பிறந்த நாள்/னேரம் சார்ந்து கோள்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் மாறுகின்றன என்று வரையறை செய்கிற நட்சத்திர ராசிபலன் சோதிடவியல் கொள்கை, மிக நேரடியான தர்க்க அடிப்படையையே மீறுவதாகவே அமைந்துள்ளது. னிரூபணம் செய்யப்படாத, தர்க்க அடிப்படை அற்ற இத்தகைய ஒரு களத்தைப்பற்றிய கற்பித்தல் திட்டத்தை இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மூலம் அறிமுகம் செய்வதென்பது, மூடனம்பிக்கைகளை அரசாங்க முயற்சிகளின் மூலம் பரப்புவதேயாகும். மேலும் இதனுடைய அறிமுகம் இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் ஷரத்து 51 ஏ ( ஹெச் ) க்கு எதிராகச் செயல்படுவதாக இருக்கும். காரணம், அறிவியல் மனப்பான்மை முனைப்புக்கு இணக்கமான முறையிலேயே ஒவ்வோர் இந்தியரும் நடந்துகொள்ள வேண்டும்; அது ஒவ்வோர் இந்தியக் குடிமகன் / மகளின் அடிப்படைக்கடமைகளுள் ஒன்று என மேற்கண்ட பிரிவு விதித்திருக்கிறது. அறிவியல் மனப்பான்மையை முனைப்புடன் முன்னெடுப்பது நம் ஒவ்வொருவரின் அடிப்படைக்கடமை என்ற நிலையில், போலி அறிவியல் கருத்துகளைப்பரப்புவது, அதுவும் அரசு நிறுவமைப்புகளே அதைச்செய்வது என்பது, எதிர்த்து முறியடிக்கப்பட வேண்டிய ஒன்று. அவ்வாறு முறியடிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய கடமையை அரசியல் அமைப்புச்சட்டம் நம் ஒவ்வொருவருக்கும் விதித்துள்ளது.

ஒன்றிய அரசினாலும், சில மானில அரசுகளாலும் பொய்யான தரவுகள், போலி அறிவியல் கருத்துகள், பொறுப்பற்ற முடிவுகள் னடைமுறைப்படுத்தப் படுவது உற்சாகமூட்டப்படுவதும், பரவலாக்கப்படுவதும் நிகழ்கின்றன. இது தொடர்பாக எங்களுடைய மாபெரும் கவலையை நாங்கள் வெளிப்படுத் துகிறோம். இந்த அணுகுமுறை, ஒரு முனையில் பெருந்தொற்றுப்பரவலுக்கு பங்களிக்கிறது. அந்தத் தொற்றுக்கு எதிரான, திட்டமிட்ட அறிவியல் ரீதியான எதிர்வினையைப்புறக்கணிக்கவும் அலட்சியப்படுத்தவும் காரணமாகிறது. கோவிட் தீ நுண்மிப் பெருந்தொற்றை எதிர்த்துப்போராடுவது அறிவியல்பூர்வ அணுகுமுறை இல்லாமல் சாத்தியமில்லை. அறிவியல்பூர்வமாக இப்பெருந் தொற்றை எதிர்த்துப்போராட, இந்தியாவின் மிகப்பெரும்பான்மையான மானிலங்களில் செயல்திறன்மிக்க பொது நலவாழ்வுப் பராமரிப்பு முறைகளைப் புறக்கணித்து, அவற்றின் வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லும் வகையில்,இலாபனோக்கத்துக்கான தனியார் மருத்துவத்துறையை முன்னெடுத்து அதற்கு மட்டும் ஆதரவளிக்கும் கொள்கைகளைக் கைவிடுவது மிக அத்தியாவசியமானதாகும். மிக மிகத்துரிதமான விதத்தில் அனைத்து மக்களுக்கும் இலவசத் தடுப்பூசி மருந்து அளிப்பதற்கான செயல்திறன்மிக்க ஒரு தேசியக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது கோவிட் எதிர்ப்புப்

போராட்டத்துக்குத் தேவையாயிருக்கிறது. நேர்மையான முறையில் சேகரிக்கப்பட்ட தரவுகள் சேகரிப்பின் அடிப்படையிலேயே வகுக்கப்படும் ஒரு திட்டம் அதற்குத் தேவைப்படுகிறது. ஒன்றிய அரசும், பல மானில அரசுகளும் தடுப்பூசி மருந்து வினியோகம் தொடர்பான சுய விளம்பரத்தில் மிகப்பெரும் தொகைகளை வீணடித்துக் கொண்டிருக்கின்றன. அதே சமயம், களங்களில் நடைமுறையில் போதுமான அளவிற்குத் தடுப்பூசி மருந்துகள், ஆக்சிஜன் போன்றவற்றை வழங்க முடியாமல் தோல்வியடைந்துள்ளன. கோவிட் தீ நுண்மிக்குப் பலியாகி மரணம் அடைந்தவர்களின் சடலங்களை முறைப்படி அடக்கம் செய்யக்கூட முடியாமல் அவை தோல்வியடைந்துள்ளன. மானில அரசின் நிர்வாக அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் உண்மையான கள நிலவரங்களைப் பற்றி துல்லியமான தகவல்களை வெளியிட்டு வரும் ஊடக நிறுவனங்கள் அச்சுறுத்தப்பட்டு மவுனமாக்கப் படுகின்றன.பொய்த்தரவுகளை முன்னெடுப்பதிலும், உண்மையைப் புதைகுழி யில் போட்டு மூடி மறைப்பதிலும் மிகுந்த செயலூக்கத்துடன் அரசாங்கமே தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

சோதிட சாஸ்திரத்தின் ராசிபலன் பகுதி தொடர்பான பாடப்பிரிவுகள்- படிப்புகள் அரசு நிதி நல்கைகளைப் பெறும் ஓவ்வொரு பல்கலைக்கழ்கத் திலிருந்தும் உடனடியாகத் திரும்பப்பெறப்பட்டாக வேண்டுமென்று அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும், பொறுப்புணர்வுடைய குடிமக்களும் கோரிக்கை விடுக்கிறோம். இவற்றுக்குப் பதில், இந்தியப்பல்கலைக்கழகங்களில் வானியலின் அறிமுகப்படிப்புகளைக் கற்பிக்குமாறு கோருகிறோம். அனைத்து மக்களுக்கான உரிமை என்ற வகையில், நல்ல தரமான நலவாழ்வுப்பராமரிப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான அறிவியல்பூர்வமான கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்; அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டுமெனவும், தனியார்மயமாக்கும் கொள்கைகள் திரும்பப்பெறப்பட வேண்டுமெனவும் கோருகிறோம். கோவிட் பெருந்தொற்றுச் சூழலைப்பற்றி

னேர்மையான முறையில் செய்திகளை வெளியிடும் ஊடகங்களின் மீது அரசு தொடுத்து வரும் தாக்குதல்களை நிறுத்திக்கொண்டுவிட வேண்டுமென்றும் நாங்கள் கோருகிறோம்.செயல்திறன் மிக்க விதத்தில் கோவிட் பெருந் தொற்றைத் தடுக்கவும்,கட்டுப்படுத்தவும் தோற்கடிக்கவும் உகந்த முறையில் பெருந்திரளான மக்கள் அளவில் அறிவியல் மனப்பான்மையுடன் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் வேண்டும். அரசியல் அமைப்புச்சட்டத் தின் ஷரத்து 51 ஏ ( ஹெச் ) க்கு உரிய மரியாதை காட்டப்பட வேண்டுமெனவும் கோருகிறோம். ஆகஸ்ட் -20 ஆம் நாளன்று அனுசரிக்கப்படவிருக்கும் தேசிய அறிவியல் மனப்பான்மை முனைப்பு நாள் நிகழ்வுகள் அனைத்திலும் பங்கேற்று, இன்றைய சவால் நிறைந்த காலங்களில் அறிவியல் மனப்பாங்கை தீவிரமாக முன்னெடுக்குமாறு அனைத்துக்குடிமக்களுக்கும், வெகுமக்கள் திரள் அமைப்புகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் அறைகூவல் விடுத்து வேண்டிக் கொள்கிறோம்.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடி, அறிவியல் மனப்பாங்கை முனைப்புடன் முன்னெடுக்கப்பாடுபட்ட கவுரி லங்கேஷ், தபோல்கர், பன்சாரே, கல்புர்கி ஆகியோர் குரூரமான முறையில் கொல்லப்பட்டதற்கு எதிரான நமது குரல்களை உயர்த்தி,உரத்து ஒலிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

( கருத்துவேற்றுமைகளை உற்சாகப்படுத்துவதுதான் மனித நாகரிக மயமாதல் - மகாத்மா காந்தி )